12.02.2024, O.S.No.284/2021, P.W.1 – அகமது மீரா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் அப்பா குடும்ப நன்மைக்காவும், குடும்பத்தில் உள்ள பிள்ளைகளில் திருமணத்திற்காகவும் சர்வே எண்.26/3 விஸ்தீரணம் 55 செண்ட் மற்றும் 26/4 விஸ்தீரணம் 19 செண்ட் குலவணிகர்புரத்தில் உள்ள நிலங்களை என் அப்பா 1970ல் விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் இளையவர்களான சேக்முகமது, நாகூர் மீரான் ஆகியோர்கள் பெயரில் கிரையம் வாங்கபட்டது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரம் என் அம்மாவை கார்டியனாக காண்பித்து சொத்து கிரையம் பத்திரம் வாங்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் பண விபரத்தில் என் தாயார் சார்பதிவாளர் அலுலவகத்தில் ரூ.14,000/– செலுத்தியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு வசதி கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ல் கண்ட கிரைய தொகையை என் அப்பா தான் கொடுத்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் கண்ட சொத்து 4, 5 பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியபட்ட சொத்து என்றால் சரியல்ல. நில உச்சவரம்பு சட்டப்படி ஒரு நபர் எத்தனை ஏக்கர் நிலங்கள் வைத்து கொள்ளலாம் என்று எனக்கு தெரியாது. நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் பாதிப்பு ஏற்படகூடாது என்பதற்காக 4, 5 பிரதிவாதிகள் பெயரில் என் அப்பா சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்பதை காட்டுவதற்கு என்னிடம் ஆதாரம் இல்லை. 4, 5 பிரதிவாதிக்கு தான் மேற்படி சொத்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என் அப்பா சொத்தை வாங்கினார் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் இல்லை. மேற்படி சொத்திற்கு 4, 5 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா எண்.497 என்றால் அது எனக்கு தெரியாது. என் பெயரிலோ, என் தந்தை பெயரிலோ பிராது 2வது இலக்க சொத்திற்கு பட்டா உள்ளதா என்று எனக்கு தெரியாது. 4, 5 பிரதிவாதிகள் மேஜரான பின்னர் மேற்படி சொத்தை அவர்கள் தாயாரான 1ம் பிரதிவாதிக்கு நன்கொடை ஆவணம் எழுதி வைக்க உரிமை உள்ளது என்றால் சரிதான். 1971ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரை 4, 5 பிரதிவாதிகள் சொத்தை ஆண்டு வந்து அவர் தாயாருக்கு நன்கொடை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல, அது செல்லாது. 2வது தபசில் சொத்தை ராமசுப்பிரமணிய முதலியார்

மனைவி ஜக்கம்மாள் 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை 2008ல் இறந்தபின்னர் 2வது தபசில் சொத்தை குடும்ப சொத்தாக அனுபவித்து வந்தோம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை. வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு நான் தான் விபரம் சொன்னேன். நானும், 7, 8 பிரதிவாதிகளும் 2 முதல் 6 பிரதிவாதிகளுடன் 2வது தபசில் சொத்தில் விவசாய வேலைகளை கவனித்து பராமரித்து வந்தோம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை. நம்பிக்கையின் அடிப்படையில் 4, 5 பிரதிவாதிகள் மற்ற பிரதிவாதிகளுக்காக சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை. நானும், 7, 8 பிரதிவாதிகளும், 4, 5 பிரதிவாதிகளை நம்பி இருந்தோம் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை. 4, 5 பிரதிவாதிகள் சேர்ந்து என் அம்மாவின் மீதுள்ள அன்பினாலும், பாசத்தினாலும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள் என்றால் எழுதி வைத்தார்கள். என் அம்மா உடனே 5பேர்களுக்கு எழுதி கொடுத்துவிட்டார். வா.சா.ஆ.4ன்படி என் அம்மா 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு நன்கொடை எழுதி வைத்துள்ளார் என்றால் எழுதி வைத்துள்ளார், அது செல்லாது. வா.சா.ஆ.4 ஆவணம் குறித்து நான் எந்தஒரு ஆட்சேபனையும் தெரிவிக்க முடியாது என்றால் சரியல்ல. 2வது தபசில் சொத்தை பொறுத்து என் அம்மாவிடம் பாகம் கேட்டனா என்றால் கேட்டேன். அவர் தரவில்லை. வா.சா.ஆ.3 ஆவணத்தில் குடும்ப சொத்தாக அனுபவிக்க என்று வாசகம் எழுதப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தை தெளிந்த சிந்னையோடு 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 2008ம் ஆண்டில் என் தாயாருக்கு வயது 77 ஆகும். 3, 6 பிரதிவாதிகளுக்கு என் தாயார் கூட்டுரிமை ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்பதற்கு ஆவணம் இல்லை. பெண் மக்களை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்று மோசடியாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. பிராது 10 வது பத்தியில் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி யாரிடம் கேட்டேன் என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகம் கேட்டு 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. என் அம்மா மற்றும் சகோதரர்கள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் என்ன கூறியுள்ளார்கள் என்று நான் படித்து பார்க்கவில்லை, படிக்க தெரியாது. என் பிள்ளைகள் படித்து காண்பித்தார்கள். 2வது தபசில் சொத்தை பொறுத்து எனக்கு எந்த

வித பாகமும் கிடைக்க கூடியது இல்லை என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் என் தாயாருக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பற்றி எப்போது தெரியும் என்றால் 2008ல் தெரியும். சாட்சி தற்போது எப்போது தெரியும் என்று சரியாக தேதி தெரியாது என்று கூறுகிறார். 2வது தபசில் சொத்தை பொறுத்து எனக்கு சொத்தில் பங்கு வேண்டும் என்று 2008ம் ஆண்டிற்கு பின்பு கேட்டேன், அவர் தரவில்லை. 8ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார் என்று எனக்கு தெரியாது. 8ம் பிரதிவாதியின் சரியான பெயர் என்ன என்றால் ஹமீது பாத்து தான். சரியான பெயரை அவரிடம் தான் கேட்கவேண்டும். அவர் சரியான பெயர் ஹமீது பாத்திமா என்றால் சரிதான். 8ம் பிரதிவாதியின் பெயரை பிராதில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று நான் மனு செய்யவில்லை என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் என்ன கூறியுள்ளார் என்று எனக்கு தெரியாது. அந்த எதிர்கோரிக்கைக்கு பதில் வழக்குரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இடைமனு எண்.2/2023ல் சில ஆவணங்களை பொறுத்து பரிகாரங்களை திருத்த வேண்டும் என்று மனு செய்து பின்னர் அதை நான் வலியுறுத்தவில்லை என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகளுக்கு என் தாயார் எழுதி கொடுத்த ஆவணம் சரியான ஆவணம் என்பதால் அது குறித்து நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் படி 1961ம் ஆண்டு என் அப்பா சில சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதில் இரண்டு இலக்க சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். பிராதில் கூறியுள்ள சொத்துக்கள் மேலப்பாளையம், மாநகராட்சி மண்டல எல்லைக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதற்கு டவுன் சர்வே எண் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு புரியவில்லை. பிராதில் கண்ட சொத்துக்கள் சம்பந்தமாக டவுன் சர்வே ரிஜிஸ்டரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1965ல் என் அப்பாவிற்கும், அவருடைய சகோதரிக்கும் நடந்த பாகபிரிவினையில் 1வது தபசில் சொத்து என் தகப்பனார் பாகத்திற்கு கிடைத்தது என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் பல சொத்துக்கள் இருக்கும் விபரம் தெரிந்து தான் இந்த வழக்கில் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.